**SUGGESTED GLOSSARY IN ENGLISH AND TAMIL FOR SENSITIVE MEDIA COVERAGE OF LGBTIQA+ ISSUES**
***developed by community members and media***
**January 2022**

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| **A. TERMS RELATED TO SEX (3) பால்சார் பதங்கள்** | | | | |
| A1 | Sex | பால் [1,2] | Sex refers to the biological make-up of a person, based on external or internal body parts, hormones, sex chromosomes, etc. | பால் என்பது ஒரு நபரின் வெளிப்புற மற்றும் உட்புற உடல் உறுப்புகள், ஹார்மோன்கள், பால் குரோமோசோம்கள் போன்றவற்றின் அடிப்படையிலான உயிரியல் பண்பமைப்பைக் குறிக்கும். |
| A2 | Sex characteristics | பால் பண்பு [1,2] | 'Sex characteristics' refer to an individual's physical sexual/reproductive features that are formed on the basis of their sex. This includes genitalia (vagina/uterus or penis/testicles etc), sex chromosomes (XX, XY, XXY, XYY, XO, etc), dominant sex hormones present in their body (estrogen, progesterone, testosterone etc), secondary sexual features (breasts, facial hair, deep voice etc), among others. Sex characteristics may influence a person's gender identity, expressions, sexual orientation or sexuality, but are not the cause of it. | ஒரு நபரின் பால் அடிப்படையிலான உடல், பால் அம்சங்கள் மற்றும் இனப்பெருக்க அம்சங்கள் பால் பண்புகள் எனப்படும்.<br>பால் உறுப்புகள், பால் குரோமோசோம்கள், உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள், இரண்டாம் நிலைப் பால் பண்புகள் போன்றவை இதில் அடங்கும். பிறப்பின்போது வழங்கப்படும் பால்பண்புகள் அந்நபரின் பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, பாலீர்ப்பு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஆனால் இவை மட்டுமே முழுக்காரணமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.<br><br>பால் உறுப்புகள்: பெண்ணுறுப்பு, கருப்பை, ஆணுறுப்பு, |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | விந்தகம் போன்றவை<br><br>பால் குரோமோசோம்கள்: XX, XY, XXY, XYY, XO போன்றவை<br><br>உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள்: ஈஸ்ட்ரஜன், ப்ரோஜெஸ்ட்ரோன், டெஸ்டாஸ்டிரோன் போன்றவை<br><br>இரண்டாம் நிலைப் பால் பண்புகள்: முகத்தில் வளரும் முடி, குரல், மார்பகங்கள் போன்றவை. |
| A3 | Intersex | இன்டர்செக்ஸ் [1,2],<br>ஊடுபால் [1],<br>இடையலிங்கம் [2,3] | Intersex people have innate sex characteristics that do not fit medical and social norms for female or male bodies. These can include external or internal reproductive parts, chromosome patterns, and/ or hormonal patterns. Being intersex can create risks or experiences of stigma, discrimination and harm.<br><br>Note: It's wrong to assume that all intersex persons are transgender. Intersex persons also have diverse intersections of gender identity, gender expression and sexuality. Like any individual, intersex persons are the only ones who can determine their gender identity, sexuality, and sexual orientation.<br><br>Note: Several intersex children are forced into surgical procedures by doctors and | இன்டர்செக்ஸ்/ / ஊடுபால் / இடையலிங்கம் என்பது ஆண்-பெண் ஈர்மறைக்கு அப்பாற்பட்ட உடல்களைக் கொண்ட நபர்களைக் குறிப்பதற்கான பொதுப்பெயர். ஊடுபால் / இன்டர்செக்ஸ் / இடையலிங்கம் நபர்களின் பிறவிப் பால்பண்புகளானது மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் மற்றும் பெண் எனும் வரையறைக்குள் ஒத்துப்போகாது. இதனால் இன்டர்செக்ஸ் / இடையலிங்கம் / ஊடுபால் நபர்கள் இழிவிற்கும் ஒதுக்குதலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.<br><br>குறிப்பு: அனைத்து இன்டர்செக்ஸ்// இடையலிங்கம்/ ஊடுபால் நபர்களும் திருநர்கள் என்று அனுமானிப்பது தவறு. |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | parents/guardians, to make their bodies 'conform' to a binary sex. This is unethical and should be called out in stories. These enforced surgeries can also result in trauma, health conditions and more later. | எல்லாரையும் போலவே பல்வேறு பாலீர்ப்புகளும், பாலின அடையாளங்களும் அவற்றை தீர்மானிக்கும் உரிமையும் இன்டர்செக்ஸ் // இடையலிங்கம் / ஊடுபால் நபர்களுக்கும் உண்டு.<br><br>குறிப்பு: மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் அல்லது பெண் எனும் வரையறைக்குள் உடலை மாற்றுவதற்காக மருத்துவர்கள் மற்றும் பெற்றோர்/காப்பாளர்கள் மூலம் இன்டர்செக்ஸ் / ஊடுபால் / இடையலிங்கம் குழந்தைகளுக்கு கட்டாய அறுவைசிகிச்சை நடத்தப்படுகிறது. இது தார்மீக முறைப்படி தவறானது. இந்த அறுவைசிகிச்சைகள் மன மற்றும் உடல்ரீதியில் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இதைக் கண்டிக்கவும் இதற்கு எதிராக குரல் எழுப்பவும் வேண்டும். |
| **B. TERMS RELATED TO GENDER (15) பாலினம்சார் பதங்கள்** | | | | |
| B1 | Gender | பாலினம் [1,2] | 'Gender' is how society perceives persons, based on the norms, behaviours and roles associated with the sex assigned at birth. For instance, a person assigned male is expected to grow up to be a 'man' and be powerful and assertive; a person assigned female is expected to grow up to be a | பிறப்பின்போது வழங்கப்படுகிற பாலினத்தைச் சார்ந்த வழமைகள், நடத்தைகள், பால் பங்களிப்பு ஆகியவற்றை வைத்து ஒரு நபரை சமூகம் பார்க்கும் விதமே "பாலினம்" எனப்படும். |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | ‘woman’ and to be sweet and nurturing. It is a social construct, and what each gender is ‘expected’ to do changes from society to society, and over time. | உதாரணமாக, பிறப்பில் “ஆண்” என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், ஆணாக வளர்ந்து, வலிமையானவராகவும் உறுதியுடனும் இருக்கவேண்டும் என்றும் பிறப்பில் "பெண்" என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், இனிமையாகவும் பிறரைப் பேணுபவராகவும் இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்ப்புகள் உள்ளன. இது ஒரு சமூகக் கட்டமைப்பு. இந்த எதிர்பார்ப்புகள் சமூகத்தைப் பொறுத்தும் காலத்தைப் பொறுத்தும் மாறுபடும். |
| B2 | Gender Identity | பாலின அடையாளம் [1,2] | 'Gender Identity' refers to how an individual defines their own gender. It depends on a person's deeply felt internal experience of gender. It need not correspond to the sex assigned to the person at birth, and the expectations that society has from this assigned sex or associated gender. 'Gender Identity' is self-determined - that is, only an individual can declare what their gender identity is. There is no 'medical test' for gender identity. For instance, a transgender man, or transgender woman, or a non-binary person, are the only ones who can say what their gender is | ஒரு நபர் தன் பாலினத்தை எப்படி வரையறுக்கிறார் என்பதே பாலின அடையாளம் எனப்படும். அந்த நபரின் ஆழமான பாலினம் சார்ந்த அனுபவங்களின் அடிப்படையில் அவரது பாலின அடையாளம் இருக்கும்.<br><br>பாலின அடையாளம் என்பது பிறப்பின்போது வழங்கப்படும் பாலினம் சார்ந்த வழமைகள் மற்றும் சமூகம் வைத்திருக்கும் எதிர்பார்ப்பைச்சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை.<br><br>பாலின அடையாளம் என்பது அந்தந்த நபரின் தீர்மானம். அவர் மட்டுமே அதை முடிவு செய்ய முடியும். பாலின அடையளத்துக்கான மருத்துவப் பரிசோதனைகள் இல்லை. திருநர்களோ பால் |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்களோ, அவர்கள் எந்தப் பாலின அடையாளத்துடன் தன்னைப் பொருத்திக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள்தான் கூறவேண்டும். |
| B3 | Gender expression | பாலின வெளிப்பாடு [1,2] | Gender expression is how a person publicly expresses or presents their gender. This can include behaviour and outward appearance such as dress, hair, make-up, body language and voice.<br><br>A person's chosen name and pronouns are also common ways of expressing gender.<br><br>Gender expression does not automatically correspond to one's gender identity. For instance, a woman may dress in pants and shirts and have short hair – generally related by society to a 'man's' gender expression.<br><br>Another example: a person assigned male at birth who wears a saree isn't automatically a transgender woman. They may still identify as a man, or as non-binary, or any other gender identity. | தன்னுடைய பாலினத்தை ஒரு நபர் எப்படிப் பொதுவில் வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பது பாலின வெளிப்பாடாகும். இது நடத்தை மற்றும் வெளித் தோற்றங்களான உடை, தலைமுடி, அலங்காரம், உடல்மொழி, குரல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது.<br><br>ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பெயர் அல்லது பெயர் விகுதிகளும் பாலின வெளிப்பாட்டின் வகைமைகளே. பாலின வெளிப்பாடு என்பது பாலின அடையாளத்தை அப்படியே சுட்டுவதாக இருக்கவேண்டும் என்பதில்லை. உதாரணமாக, ஆண்களின் பாலின வெளிப்பாடாகக் கருதப்படும் பேண்ட், சட்டைகளை ஒரு பெண் அணியலாம். அவர் குட்டையாக முடி வெட்டியிருக்கலாம். அல்லது பிறப்பில் ஆணாக வகைப்படுத்தப்பட்ட ஒருவர் புடவை அணிவதாலேயே அவர் திருநங்கை ஆகிவிடமாட்டார். அவர் தன்னை ஒரு ஆணாகவோ, பால் ஈர்மறைக்கு அப்பாற்பட்டவராகவோ, வேறு |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | பாலினத்துடனோ அடையாளப்படுத்திக்கொள்ளலாம். |
| B4 | Gender non-conforming person | பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர் [1]<br><br>பாலின வெளிப்பாடு அல்லது அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர் [2] | People (adults or children [4]) who do not conform to either of the binary gender definitions of male or female, as well as those whose gender expression may differ from standard gender norms. In some instances, individuals are perceived as gender non-conforming by other people because of their gender expression.<br><br>However, these individuals may not perceive themselves as gender non-conforming. Gender expression and gender non-conformity are clearly related to individual and social perceptions of masculinity and femininity. | ஆண் அல்லது பெண் என்ற இரு பாலின வரையறைக்குள் தன்னைப் பொருத்திக்கொள்ளாதவர்கள் மற்றும், பொதுவான பாலின வரையறைகளுக்கு அப்பாற்பட்ட பாலின வெளிப்பாடு உடைய நபர்கள். சில சமயங்களில், ஒருவரது பாலின வெளிப்பாடு காரணமாக அவரை பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்கள் என்று மற்றவர்கள் வரையறுக்கலாம். ஆனால் அந்த நபர் தங்களை அவ்வாறு அடையாளப்படுத்திக்கொள்ளாதவர்களாகக் கூட இருக்கலாம். பாலின வெளிப்பாடு மற்றும் பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாமல் இருப்பது போன்ற அம்சங்கள் தனிநபரோ சமூகமோ ஆண்தன்மை, பெண்தன்மை ஆகியவற்றை எப்படி அணுகுகிறது என்பதைப் பொறுத்து மாறுபடும். |
| B5 | Transgender person | திருநர் [1,2] | A transgender person is someone whose gender identity does not match with the sex they were assigned at birth. People assigned male or female at birth, and intersex persons, can be transgender.<br><br>A person is transgender whether or not such a person has undergone gender affirmation procedures like hormone therapy or surgery, as per the Supreme Court NALSA verdict (2014) and | பிறப்பில் தரப்பட்ட பால் வகைமையுடன் தங்கள் பாலின அடையாளம் ஒத்துப் போகாதவர்கள் திருநர் என்று அழைக்கப் படுகிறார்கள். பிறப்பால் ஆண் அல்லது பெண்ணாக வகைப்படுத்தப்பட்டவர்களும், ஊடுபால் நபர்களும் திருநர்களாக இருக்கலாம். தன்னைத் திருநராக அடையாளப்படுத்திக்கொள்ளும் |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | Transgender Persons (Protection of Rights) Act.<br><br>Note: Do not use the term 'transgenders' or 'a transgender', i.e. as a noun. The word has to be used as an adjective. The correct usage is transgender person, trans person, transgender woman, trans woman, transgender man, trans man, etc. depending on the context. | நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| B6 | Trans woman or Transgender woman | திருநங்கை [1,2] | 'Transgender woman' refers to a person who was assigned male at birth, but whose gender identity is that of a woman. 'Transgender woman' can be shortened to 'trans woman' (two words). | பிறப்பில் மற்றவர்களால் ஆணாக வகைப்படுத்தப்பட்டு தன்னை பெண்ணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநங்கை என்று அழைக்கப்படுகிறார்.<br><br>தன்னைத் திருநங்கையாக அடையாளப்படுத்திக்கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| B7 | Trans man or Transgender man | திருநம்பி [1.2] | 'Transgender man' refers to a person who was assigned female at birth, but whose gender identity is that of a man. 'Transgender man' can be shortened to 'trans man' (two words). | பிறப்பில் மற்றவர்களால் பெண்ணாக வகைப்படுத்தப்பட்டு தன்னை ஆணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநம்பி என்று அழைக்கப்படுகிறார்.<br><br>தன்னைத் திருநம்பியாக |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | அடையாளப்படுத்திக்கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| B8 | Gender non-binary person | பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர் [1] | ‘Non-binary’ refers to a gender identity that doesn’t ascribe to the woman-man binary. A ‘non-binary’ person is someone who does not identify as a man or a woman. | ஆண், பெண் என்ற ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆணாகவோ பெண்ணாகவோ தன்னை வகைப்படுத்திக்கொள்வதில்லை. |
| B9 | Gender dysphoria | பாலின முரண்பாட்டு மனஉளைச்சல் [1] | The psychological distress that results from an incompatibility between a person’s self-perceived gender identity, and the gender they are associated with by society based on the sex they were assigned at birth [5].<br><br>Not all trans persons may experience gender dysphoria. Many may experience gender dysphoria from childhood, while others may experience it later - such as after puberty. | பிறப்பின்போது தரப்படும் பால் வகைமைக்கும் தான் உணரும் பாலின அடையாளத்துக்கும் இடையே முரண்பாடோ வேற்றுமையோ ஏற்படும்போது வரும் மன உளைச்சலே Gender Dysphoria என்று அழைக்கப்படுகிறது. இந்த உளைச்சல் சிறுவயதிலேயோ அல்லது பருவமடைந்த பிறகோ ஏற்படலாம்.<br>அனைத்து திருநர்களுமே பாலின முரண்பாட்டு மன உளைச்சல் எதிர்கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| B10 | Gender incongruence | பாலின முரண்பாடு [1] | A marked and persistent incongruence between the gender felt or experienced by a person, and the gender associated by society with the sex they were assigned at birth [6] | பிறப்பின் போது வழங்கப்படும் பால் வகைமையைப் பொறுத்து ஒரு சமூகம் ஒரு நபரிடம் எதிர்பார்க்கும் பாலினத்துக்கும், அந்த நபர் உணரும் பாலினத்துக்கும் இடையிலான அழுத்தமான தொடர் முரண்பாடு. |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
| --- | --- | --- | --- | --- |
| B11 | Gender affirmation procedures | பாலின உறுதி நடைமுறைகள் [1,2] | Procedures that help an individual affirm their gender identity, including social (wearing clothes perceived to be closer to gender of choice, attempting to "live as the gender", medical (surgery, hormone, laser), and legal (changing their name and gender on paper) procedures. | பாலின அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடைமுறைகள். இவை மருத்துவம் சார்ந்ததாகவோ, சட்டரீதியாகவோ சமூகப்பார்வை சார்ந்ததாகவோ இருக்கலாம்.<br><br>மருத்துவம்: அறுவைசிகிச்சை, ஹார்மோன், லேசர் போன்றவை<br><br>சட்டரீதியானவை: ஆவணங்களில் பெயர் அல்லது பாலினத்தை மாற்றுவது<br><br>சமூகரீதியானவை: தாங்கள் அடையாளப்படுத்தும் பாலினத்துக்கு நெருக்கமான உடைகள், வாழ்க்கைமுறைகள். |
| B12 | Gender Affirmation Surgery | பாலின உறுதி அறுவை சிகிச்சை [1,2] | Surgery of external sex characteristics that help an individual affirm their gender identity, or 'look how they feel on the inside'.<br><br>It is recommended to use this term instead of sex reassignment surgery (SRS), which was used in the past. | ஒரு நபரின் பாலின அடையாளத்தை உறுதிப்படுத்தவோ, "உள்ளுக்குள் அவர்கள் எப்படி உணர்கிறார்களோ" அதன்படியே வெளிப்புற பால் அம்சங்களையும் மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சை. பால்மாற்று சிகிச்சை என்று முன்பு பயன்படுத்தப்பட்ட பதத்திற்கு பதிலாக 'பாலின உறுதி அறுவைசிகிச்சை' எனும் பதம் பயன்படுத்தப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. |
| B13 | Deadname | வழங்கப்பட்ட பெயர் [1] | The name that was given to a transgender person by their family, and one by which they were | பிறப்பின்போது தரப்பட்ட பால் வகைமையின் |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | identified. However, the transgender individual may no longer use that name.<br><br>The name a transgender person has 'left behind' or 'killed', Usually, this refers to the name they were given by their parents/guardians.<br><br>Note: While reporting, do not ask for a person's 'old name' or 'original name' or deadname. It is not an important detail the society needs to know, and mentioning a person's deadname in a story is disrespectful. Similarly, descriptions like “the man became a woman” or “the woman became a man” should be avoided.<br><br>You must stick to the name they give you in all published reports. | அடிப்படையில் திருநருக்கு வழங்கப்பட்ட பெயர் (குடும்பத்தினரால் வழங்கப்பட்ட பெயர்) மற்றும் மற்றவர்களால் அடைபாளப்படுத்தப் பட்டுக்கொண்டிருந்த பெயர். அந்தப்பெயரால் திருநர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. மற்றவர்கள் அடையாளப்படுத்துவதையும் விரும்புவதில்லை.<br><br>குறிப்பு: செய்திகளைத் தரும்போது, “உங்கள் உண்மையான பெயர் என்ன?/பழைய பெயர் என்ன?” போன்ற கேள்விகளைத் தவிர்க்கவேண்டும். அது அவசியமில்லாத தகவல். செய்திக் குறிப்பில் திருநரின் வழங்கப்பட்ட பெயரைக் குறிப்பிடுவது அவரை இழிவுபடுத்துவதாகும்.<br>அவர் தன்னை எந்த பெயரில் வெளிப்படுத்த விரும்புகிறாரோ அந்த பெயரில் அடையாளப்படுத்துவது மட்டுமே போதுமானது. |
| B14 | Genderfluidity/Genderfluid person | திரவ நிலை பாலின அடையாளம் [1,2] | ‘Genderfluidity’ refers to a person’s experience of not having a ‘fixed’ gender. A ‘gender fluid’ person may identify with all genders, multiple genders, or with two genders (bigender). (Also see: non binary.) | தனக்கு நிலையான ஒரு பாலினம் இல்லை என்று உணர்பவர்கள். எல்லா பாலினங்களோடோ, சில பாலினங்களோடோ, இரு பாலினங்களோடோ அல்லது இரு பாலினங்களில் ஏதேனும் ஒன்றோடோ இவர்கள் தங்களைப் பொருத்திக்கொள்ளலாம். |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| B15 | Cisgender | சிஸ் [1,2], ஆதிக்க பாலினம் [1] | A person whose gender identity conforms with the gender corresponding to the sex assigned at birth. A person who is not transgender or non-binary is cisgender. | பிறப்பின்போது தரப்பட்ட பால் வகைமையுடன் மற்றும் பாலினத்துடன் இவர்களின் பாலின அடையாளம் பொருந்தும். திருநராக இல்லாதவர்கள் மற்றும் ஈர்மறைகளோடு ஒத்துப் போகிறவர்கள் ஆதிக்கப் பாலினத்தைச் சேர்ந்தவர்கள். |
| **C. TERMS RELATING TO SEXUALITY (8) பாலியல்புசார் பதங்கள்** | | | | |
| C1 | Sexuality | பாலியல்பு [1] | Sexuality refers to a person's behaviours, desires, identity and attitudes related to sex and physical intimacy with others. | பிறருடனான உடல்ரீதியான அணுக்கம், பாலுறவு தொடர்பான விஷயங்களில் ஒருவரின் பழக்கவழக்கங்கள், விருப்பங்கள், அடையாளங்கள், அணுகுமுறை ஆகியவை. |
| C2 | Sexual Orientation | பாலீர்ப்பு [1,2], பாலின ஈர்ப்பு [1,2] | 'Sexual orientation' refers to which person(s)/gender(s) an individual is attracted to - physically, emotionally, and/or romantically. For instance, 'heterosexual' orientation refers typically to attraction between a man and a woman. 'Homosexual' refers to attraction between two men or two women.<br><br>Note: 'Sexual orientation' is different from 'gender identity'.<br><br>Example: Just like a cisgender woman can be heterosexual, bisexual or homosexual (straight, bi or lesbian), a transgender woman, too, can be heterosexual, homosexual or can have any of a wide variety of sexual orientations. | ஒரு நபர், எந்த நபர்கள் அல்லது பாலினங்களுடன் உடல் ரீதியாக, உணர்வுரீதியாக மற்றும்/அல்லது காதலுடன் ஈர்க்கப்படுகிறார் என்பதே பாலீர்ப்பு / பாலின ஈர்ப்பு எனப்படும். உதாரணமாக, எதிர்பாலீர்ப்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்பு. ஒருபாலீர்ப்பு என்பது இரு ஆண்கள் அல்லது இரு பெண்களுக்கிடையே ஏற்படும் ஈர்ப்பு.<br><br>குறிப்பு: பாலீர்ப்பு என்பது பால் அடையாளத்திலிருந்து வேறுபட்டது. உதாரணமாக, ஒரு ஆதிக்கப் பாலினத்தைச் சார்ந்தவர், எதிர்பாலீர்ப்பு |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | கொண்டவராகவோ ஒருபாலீர்ப்பு கொண்டவராகவோ இருபாலீர்ப்பு கொண்டவராகவோ இருக்கலாம். அதைப் போலவே ஒரு திருநருக்கும் எதிர்பாலீர்ப்பு, ஒருபாலீர்ப்பு அல்லது வேறு எந்தப் பாலீர்ப்பு வேண்டுமானாலும் இருக்கலாம். |
| C3 | Heterosexuality/ Heterosexual | எதிர்பாலீர்ப்பு [1,2], எதிர்பாலின ஈர்ப்பு [2]<br><br>Straight = எதிர்பாலிர்ப்புடைய நபர், எதிர்பாலின ஈர்ப்புடைய நபர் [2] | ‘Heterosexuality' typically refers to the sexual attraction between men and women. A 'heterosexual man' or 'straight man' is a man who is attracted to women. A 'heterosexual woman' or 'straight woman' refers to a woman who is attracted to men.<br><br>'Heteroromantic' refers to romantic/emotional attraction, beyond just sexual attraction. This applies for cisgender and transgender persons. | ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே வரும் பாலீர்ப்பு எதிர்பாலீர்ப்பு என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. பெண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் ஆண் எதிர்பாலீர்ப்பு கொண்ட ஆண் என்றும், ஆண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் பெண் எதிர்பாலீப்பு கொண்ட பெண் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். பால் ஈர்ப்புக்கு அப்பாற்பட்ட, உணர்வுரீதியான/காதல்சார் ஈர்ப்பும் உண்டு. இது ஆதிக்கப் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருநர்களுக்கும் பொருந்தும். |
| C4 | Homosexuality/ Homosexual | ஒருபாலீர்ப்பு [1,2], தன்பாலீர்ப்பு [1,2], ஒருபாலின ஈர்ப்பு [2], தன்பாலின ஈர்ப்பு [2],<br>Gay man = கேய் [1,2], ஒருபாலீர்ப்புடைய ஆண் [1,2],, ஒருபாலின ஈர்ப்புடைய ஆன் [2], மகிழ்வன் [1] | 'Homosexuality' refers to an sexual attraction to a person of their same gender. A 'homosexual man' or a 'gay man' is a man who is attracted to men; a 'homosexual woman' or 'lesbian' refers to a woman who is attracted to women.<br><br>'Homoromantic' refers to a person who feels romantic/emotional attraction to persons of the same gender. This applies for cisgender and transgender persons. | தங்களுடைய பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மீது பால் ஈர்ப்பு கொள்ளும் தன்மை ஒருபாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. பெண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் பெண் ஓர்பார்லீப்பு கொண்ட பெண் என்றும், ஆண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் ஆண் ஓர்பாலீர்ப்பு கொண்ட ஆண் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். பால் ஈர்ப்புக்கு |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | Lesbian Woman = லெஸ்பியன் [1,2], ஒருபாலீர்ப்புடைய பெண் [1,2], ஒருபாலின ஈர்ப்புடைய பெண் [2], தன்பாலீர்ப்புடைய பெண் [1,2], தன்பாலின ஈர்ப்புடைய பெண் [2, | | அப்பாற்பட்ட, உணர்வுரீதியான/காதல்சார் ஈர்ப்பும் உண்டு. அதுவும் ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர்களிடம் ஏற்படலாம். இது ஆதிக்க பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருநர்களுக்கும் பொருந்தும். |
| C5 | Bisexuality/Bisexual | இருபாலீர்ப்பு [1,2], இருபாலின ஈர்ப்பு [1,2]<br><br>Bisexual person<br>இருபாலீர்ப்புடையவர் [1,2], இருபாலீர்ப்புடைய நபர் [1,2] (ஆண் / பெண் / திருநர்) இருபாலின ஈர்ப்புடையவர் [1], இருபாலின ஈர்ப்புடைய நபர் / ஆண் / பெண் / திருநர்) [2] | 'Bisexuality' refers to attraction towards persons of one's own gender, and persons of another gender. In the past, bisexuality has been defined as attraction to both men and women. But as our understanding of gender and gender identity evolves beyond the man/woman binary, the definition of bisexuality is also evolving.<br><br>'Bisexuality' need not imply equal degree of attraction to both genders - just significant attraction to both. | தன்னுடைய பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிற பாலினத்தைச் சேர்ந்தவர்களிடம் பாலீர்ப்பு கொள்ளும் தன்மை இருபாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. கடந்த காலத்தில், ஆண் பெண் ஆகிய இருபாலினங்களின்மீதும் ஈர்ப்பு கொள்வது இருபாலீர்ப்பு என்று அழைக்கப்பட்டது. ஆனால் ஆண்-பெண் என்ற ஈர்மறைக்கு அப்பாற்பட்டு பாலினம் மற்றும் பாலின அடையாளம் சார்ந்த புரிதல் வளரும்போது, இருபாலீர்ப்பு பற்றிய வரையறையும் பரிணாம வளர்ச்சியடைகிறது.<br><br>இருபாலீர்ப்பு என்பதற்கு இரு பாலினத்தவர்கள் மீதும் சமமான ஈர்ப்பு என்று பொருளல்ல. |
| C6 | Pansexuality/Pansexual | அனைத்துப்பாலீர்ப்பு [1], அனைத்துப்பாலின ஈர்ப்பு [1] | 'Pansexuality' refers to attraction towards persons of multiple genders/all genders, or attraction irrespective of gender. A 'pansexual person' feels attraction towards persons of all genders or | அனைத்து பாலினங்கள் அல்லது பல பாலினங்களைச் சேர்ந்த நபர்கள் மீது வரும் பாலீர்ப்பு அல்லது பாலினத்துக்கு அப்பாற்பட்ட ஈர்ப்பு அனைத்துப்பாலீர்ப்பு |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | பலபாலீர்ப்பு [2]<br>பலபாலின ஈர்ப்பு [2] | multiple genders.<br><br>'Pansexuality' need not imply equal attraction to all genders. | அல்லது பலபாலீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. அனைத்துப்பாலீர்ப்பு அல்லது பலபாலீர்ப்பு கொண்ட நபர் அனைத்து பாலினங்கள் அல்லது பல பாலினங்களைக் கொண்ட நபர்கள்மீது பாலீர்ப்பு கொண்டவர்.<br><br>அனைத்துப் பாலீர்ப்பு என்பது எல்லா பாலினங்களின்மீதும் சமமான ஈர்ப்பு என்பதைக் குறிப்பதல்ல. |
| C7 | Asexual/Aromantic (Aro-Ace) | அபாலீர்ப்பு [1]<br><br>Asexual person: பாலீர்ப்பு அற்றவர் [1] | 'Asexual' refers to a person who does not feel sexual attraction towards anyone.<br><br>'Aromantic' refers to a person who does not feel romantic/emotional attraction towards anyone.<br><br>Note: A person can be both asexual and aromantic at the same time; or they can feel only sexual attraction, or only romantic attraction, and not the other.<br><br>For example, a person can be asexual, but at the same time feel romantic attraction towards persons of the same gender, or vice versa. | எவரின்மீதும் பாலீர்ப்பு இல்லாதவர்களைக் குறிக்கும் சொல்.<br><br>எவரின்மீதும் உணர்வுரீதியான/காதல்சார் உணர்வுகளைக் கொள்ளாதவர்கள் Aromantic என்று அழைக்கப்படுகிறார்கள்.<br><br>குறிப்பு: அபாலீர்ப்பு கொண்டவர்கள் Aromantic நபர்களாகவோ, அல்லது காதல்சார் உணர்வுகள் கொண்டவர்களாகவோ இருக்க வாய்ப்பு உண்டு. Aromantic நபர்கள் பாலீர்ப்பு கொண்டவர்களாகவும் இருக்கலாம். |
| C8 | Romantic orientation | ரொமாண்டிக் ஓரியண்டேஷன் | 'Romantic orientation' refers to an individual's romantic/emotional attraction, independent of their sexual attraction. People can be 'homoromantic', 'heteroromantic', 'panromantic', 'aromantic' etc. | ரொமாண்டிக் ஓரியண்டேஷன் என்பது ஒரு நபரின் காதல் அல்லது உணர்ச்சி சார்ந்த ஈர்ப்பு. இது |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | Romantic orientation need not correspond to a person's sexual orientation.<br><br>For instance, a person who is pansexual – that is, they are sexually attracted to people of all genders – can be homoromantic, which means they want to have romantic/emotional relationships only with persons of their own gender. | ஒருவரின் பாலியல் ஈர்ப்பு சார்ந்தது அல்ல. ஒருவர் 'homoromantic', 'heteroromantic', 'panromantic', 'aromantic' போன்றவர்களாக இருக்கலாம். ரொமாண்டிக் ஓரியண்டேஷன் ஒரு நபரின் பாலீர்ப்பை ஒத்திருக்க வேண்டியதில்லை .<br><br>உதாரணமாக, அனைத்துப் பாலீர்ப்பாளராக இருக்கும் ஒரு நபர் - அதாவது, அனைத்து பாலினத்தவர்களிடமும் பாலியல் ரீதியாக ஈர்க்கப்படுகிறவர் - homoromanticஆக இருக்கலாம், அதாவது அவர்கள் தங்கள் சொந்தப் பாலினத்தவர்களுடன் மட்டுமே காதல்/உணர்ச்சி ரீதியான உறவுகளை வைத்திருக்க விரும்பலாம். |
| **D. UMBRELLA/ COLLECTIVE TERMS (2) ஒருமித்த பதம்** | | | | |
| D1 | Queer | பால்புது [1],<br>பால்புதுமை [1],<br>குயர் [1,2],<br>மாற்று பால்-பாலின-பாலீர்ப்பு கொண்ட நபர் [2] | 'Queer' is an umbrella term used to refer to diverse sex characteristics, genders and sexualities that are not cisgender and/or heterosexual. It is a 'reclaimed' word - the word was used as a slur for people who did not align to the societal assumptions of gender and sexuality in the past. However, the LGBTIQA+ community has now claimed ownership of the term and use it to describe themselves. | எதிர்பாலீர்ப்பு கொள்ளாதோரையும், பிறப்பில் குறிக்கப்படும் பாலினத்தோடு அடையாளப்படுத்திக் கொள்பவர்களையும் குறிப்பிட பால்புதுமையினர் அல்லது குயர் எனும் வார்த்தையை பயன்படுத்துகிறோம். ஆங்கிலத்தில் குயர் எனும் சொல் ஒரு "மீட்டெடுக்கப்பட்ட" சொல். கடந்த |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | Queer person: பால்புதுமையினர் [1], பால்புது நபர் [1], மாற்று பால்-பாலின-பாலீர்ப்பு கொண்டவர் [2] | In Tamil the term "paalputhumai" is used to signal a move to a more evolved understanding of human diversity and identities. It is a departure from the dominant, outdated cisgender, heterosexual centric understanding of sex, gender and sexuality [1].The term includes persons of diverse sex characteristics, gender expressions and identities, and sexualities who identify themselves as queer and includes emerging politics around these topics. | காலங்களில், சமூகத்தின் பாலின மற்றும் பாலீர்ப்பு எதிர்பார்ப்புக்கு ஒத்துவராதவர்களுக்கான வசைச்சொல்லாக இது இருந்தது. ஆனால் இப்போது LGBTIQA+ மக்கள் இதைத் தங்களுக்கானதாக மாற்றி, தங்களை வரையறுத்துக்கொள்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.<br><br>ஆதிக்கப்பாலினம் மற்றும் எதிர் பாலீர்ப்பு சார்ந்த அடையாளங்கள் மற்றும் சிந்தனைகள் பழமைவாதத்தை மையப்படுத்தி இருக்கும் நிலையில் அதிலிருந்து நகர்ந்து அனைத்து பாலின, பாலீர்ப்பு, பால்பண்பு அடையாளங்களையும் சிந்தனைகளையும் உள்ளடக்கி காலத்திற்கேற்ற புரிதலோடு தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் என்கிற அர்த்தத்தில் 'பால்புதுமை' எனும் வார்த்தை தமிழில் பயன்படுத்தப்படுகிறது. |
| D2 | LGBTIQA+ / LGBTQIA+ | மாற்று பால்-பாலின-பாலீர்ப்பு கொண்டவர்கள் [2];<br><br>குயர், திருநர் அபாலீர்ப்பு உடையவர் மற்றும் இடையிலிங்கத்தவர் [2], | LGBTIQA+ is a term used to collectively refer to gay, lesbian, bisexual, transgender, queer, intersex, asexual, pansexual people and people of other non- cisgenders and non-hetero sexual orientations. The term is sometimes shortened to LGBT, or LGBTQ, or LGBTQ+ as well. | ஒருபாலீர்ப்பு கொண்டவர்கள், இருபாலீர்ப்பு கொண்டவர்கள், திருநர், பால்புதுமையினர், ஊடுபால் மக்கள், அபாலீர்ப்பு கொண்டவர்கள், பலபாலீர்ப்பு/அனைத்துபாலீர்ப்பு கொண்டவர்கள், ஆதிக்கப் பாலினம் மற்றும் எதிர்பாலீர்ப்புக்கு அப்பாற்பட்ட பண்புகளைக் கொண்டவர்கள் ஆகியோர். |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | பால்புதுமையினர் [1] | | இந்த பதம் சிலநேரங்களில் LGBT, அல்லது LGBTQ அல்லது LGBTQ+ என்றும் குறிப்பிடப்படும். |
| **E. OTHER COMMUNITY TERMS (4) சமூகம்சார் பிற பதங்கள்** | | | | |
| E1 | Coming Out | வெளிப் படுத்திக் கொள்ளுதல் [1,2] | 'Coming out' is the process of disclosing one's LGBTQIA+ identity to others. Usually, LGBTQIA+/queer persons 'come out' multiple times throughout their lives in different interactions with different people. That is, it's not a 'one-time' event.<br><br>NOTE: There is criticism and discourse around the fact that LGBTQIA+ persons have to 'come out' at all – because the assumption in society is that everyone is, or ought to be, cisgender and straight. While doing stories about a person 'coming out' or mentioning 'coming out' in a story, please do so with an understanding that this should not have to be the norm for queer persons. | தங்களது பால்புதுமை அடையாளத்தை மற்றவர்களிடம் வெளிப்படுத்திக்கொள்வது. பொதுவாக, பால்புதுமையினர், தங்கள் வாழ்நாள் முழுவதும் பலரிடம் பல்வேறு சூழல்களில் வெளிப்படுத்திக்கொள்வார்கள். இது ஒரு தனித்த, ஒற்றை நிகழ்வு அல்ல.<br><br>குறிப்பு: LGBTQIA+ நபர்கள் தங்களை வெளிப்படுத்திக்கொள்வது அவசியம் என்றும், ஏனென்றால் பொதுவாக சமூகத்தின் வழமை என்பது ஆதிக்கப் பாலினம் அல்லது எதிர்பாலீர்ப்பாகத்தான் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதன்மீது விமர்சனங்கள் உண்டு. ஆகவே, பால்புதுமையினர் தன்னை வெளபப்படுத்திக்கொள்வதைப் பற்றி செய்திகளில் தெரிவிக்கும்போது, பால்புதுமையினர் அனைவரும் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்ற புரிதலோடு அதை அணுகவேண்டும். வெளிப்படுத்திக் கொள்ளுதல் தனிநபரின் முடிவு. ஒரு |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | நபரின் அடையாளத்தை மற்றொருவர் எப்போதும் வெளிப்படுத்த முடியாது. |
| E2 | Ally | ஆதரவாளர் [1,2]], தோழமை [1] | A person or organization supportive of the rights of LGBTIQA+ persons and communities and uses their privilege/position in society to promote LGBTQIA+ rights, communities, and causes.<br><br>Note: An 'ally' should ideally be identified by the community/communities based on their actions. Self declaration of allyship does not mean much if the person's actions and words end up hurting the communities they claim to support. Take the self declaration of allyship by cisgender and heterosexual persons with a pinch of salt, and while reporting, try to confirm with LGBTQIA+ communities whether this person is actually seen as an ally by the communities in question. | LGBTIQA+ மக்கள் மற்றும் சமூகத்தினரின் உரிமைகளுக்கு ஆதரவு தரும் நபர் அல்லது அமைப்பு. சமூகத்தில் தங்களது இடத்தைப் பயன்படுத்தி, பால்புது மக்கள் மற்றும் சமூகத்தினருக்கான உரிமைகளைப் பிரச்சனைகளைப் பேசுபவர்.<br><br>குறிப்பு: ஒருவரது செயல்பாடுகளைக் கொண்டு அவர்கள் ஆதரவாளர்களா இல்லையா என்பதை பால்புது சமுதாய மக்களே முடிவுசெய்ய முடியும். தன்னை ஆதரவாளராக அறிவித்த நபர், தாங்கள் ஆதரவளிக்கும் சமூகத்தினரைக் காயப்படுத்தும் செயல்பாடுகள் அல்லது பேச்சுகளில் ஈடுபடும்போது அந்தத் தோழமை அர்த்தமற்றுப் போய்விடுகிறது. ஆதிக்கப் பாலினம் மற்றும் எதிர்பாலீர்ப்பு கொண்டவர்கள் ஆதரவாளர்கள் என்று அறிவித்துக்கொள்வதை கவனமாகக் கையாளவேண்டும். ஆதரவாளர்களைப் பற்றிய செய்திகளை வெளியிடும்போது, பால்புது சமூகத்தினரிடம் அவரது ஆதரவுத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| E3 | Queer Pride Parade/ Rainbow Pride Parade | பால்புது-சுயமரியாதை பேரணி [1]<br><br>வானவில்-சுயமரியாதை பேரணி [2] | 'Queer pride parades'or 'Rainbow pride parades' or 'LGBTQIA+ pride parades' are events celebrating LGBTIQA+/queer culture and asserting self-respect in these identities. These events are often used as a method for visibility for queer groups, as well as platforms to demand for the rights of queer communities. | பால்புது சுயமரியாதைப் பேரணி அல்லது வானவில் சுயமரியாதைப் பேரணி என்பது LGBTIQA+ / பால்புதுமையினரின் கலாச்சாரத்தைக் கொண்டாடுகிற, அடையாளங்களின் சுயமரியாதையை நிறுவுகின்ற நிகழ்வாகும். இதுபோன்ற நிகழ்வுகள் LGBTIQA+/ பால்புதுமையினருக்கான தளங்களாகவும், அவர்களது உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் வாய்ப்பாகவும் பயன்படுத்தப்படுகின்றன. |
| E4 | Conversion Therapy,<br><br>SOGIE-change efforts | போலி மருத்துவம் [1] | Practices that aim to 'change' or 'convert' people from queer to heterosexual, from trans to cisgender, or gender non-conforming to gender conforming. Some of these attempts stem from superstitions and religion-based beliefs.<br><br>These are unethical, illegal and unscientific efforts that have been banned in Tamil Nadu. | LGBTIQA+ நபர்களின் அடையாளங்களை நிராகரித்து சமுதாய வழமைக்குட்பட்ட பாலினம் மற்றும் அல்லது பாலீர்ப்பு கொண்டவர்களாக "மாற்றும்" மருத்துவ செயல்முறைகள்.<br><br>இவை அறத்துக்கு எதிரானவை. சட்டத்துக்குப் புறம்பானவை, அறிவியல்ரீதியாக தவறானவை. இவை தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளன.<br><br>மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலும் ஒருவரது பாலினம் மற்றும் அல்லது பாலீர்ப்பை மாற்றும் நடைமுறைகள் கையாளப்படுகின்றன.<br><br>இவை இரண்டுமே ஆங்கிலத்தில் "கன்வெர்ஷன் தெரப்பி" என்று அழைக்கப்படுகிறது. இதனால் சம்மந்தப்பட்ட நபர் உடலளவிலும் மனதளவிலும் |

| S.No | Term (English) | Term (Tamil) | Description (English) | Tamil Description [1] |
|---|---|---|---|---|
| | | | | பாதிக்கப்படக்கூடும். சமயங்களில் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். |

**Sources and Further Reading:**


[1] Queer Chennai Chronicles (QCC), QCC and TNM Media Guide Glossary Section.

- C Moulee (he/him/ன்), Co-Founder Queer Chennai Chronicles
- Ragamalika Karthikeyan (he/she/ன்/ள்), Editor - Special Projects and Experiments, The News Minute (TNM)
- Gireesh (he/him/ன்), Writer & Poet. Editor - Queer Chennai Chronicles
- Narayani Subramanian (she/her/ள்), Writer & Marine Researcher.
- Nadika Nadja (she/they/ள்/ர்), Writer. Member - Sampoorna Working Group
- Senthil (he/him/ன்), Program Director - Queer Chennai Chronicles.

  (a) https://www.paalputhumai.com/resources/lgbtqia-terms-in-tamil/
  (b) https://www.thenewsminute.com/article/understanding-lgbtq-exhaustive-explainer-gender-and-sexual-identities-44439

[1] குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ் (QCC), QCC மற்றும் TNM -ன் ஊடகக் கையேட்டின் பால்புது பதங்கள் பகுதியிலிருந்த.

- ச மௌலி, இணை நிறவனர் குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
- ராகமாலிகா கார்த்திகேயன், ஆசிரியர் - சிறப்புத் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள், திநியூஸ் மினிட் (TNM)
- கிரீஷ், எழுத்தாளர் & கவிஞர். ஆசிரியர் - குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்
- நாராயணி சுப்ரமணியன், எழுத்தாளர் & கடல்சார் ஆய்வாளர்
- நாடிகா நாடியா, எழுத்தாளர். சம்பூர்ணா பணிக்குழு உறுப்பினர்
- செந்தில், திட்ட இயக்குனர் - குயர் சென்னை க்ரோனிக்கிள்ஸ்

  (a) https://www.paalputhumai.com/resources/lgbtqia-terms-in-tamil/
  (b) https://www.thenewsminute.com/article/understanding-lgbtq-exhaustive-explainer-gender-and-sexual-identities-44439

[2] Volunteers from Orinam (ஓரினம்) collective and online resources on www.orinam.net including

http://orinam.net/resources-for/friends-and-family/terminology/
http://orinam.net/resources-for/media/orinam-media-kit/

[3] Personal communication: intersex activist Vino from Intersex Human Rights India

[4] UNESCO has collated research globally (including from India) on how gender-nonconforming children are at high risk of bullying in educational institutions, often leading to dropping out.
https://en.unesco.org/themes/school-violence-and-bullying/homophobic-transphobic-violence
http://orinam.net/sahodaran-unesco-bullying-tamilnadu/

[5] Gender dysphoria definition adapted from American Psychiatric Association's DSM-V
https://www.psychiatry.org/patients-families/gender-dysphoria/what-is-gender-dysphoria

[6] Gender incongruence definition adapted from World Health Organization's ICD-11
https://www.euro.who.int/en/health-topics/health-determinants/gender/gender-definitions/whoeurope-brief-transgender-health-in-the-context-of-icd-11